வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No : P-1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=








Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 13.01.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 13 பக்கங்கள் : 08


# முரசுமோட்டையில் கோர விபத்து அதேஇடத்தில் நால்வர் உயிரிழப்பு

## ஒருவர் படுகாயம்! நேற்று மாலை துயரம்!!

கிளிநொச்சி, ஜனவரி 13

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டை - நான்காம் கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் நால்வர் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

இந்த விபத்து மாலை 4.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விசுவமடு பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கார் ஒன்றும் வவுனியாவில் இருந்து விசுவமடு நோக்கி பயணித்த பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு

07



# கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் மாணவர்கள் மனதை சிதைப்பதா?

## சஜித் பிரேமதாஸ விசனம்

கொழும்பு, ஜன. 13

இலங்கையின் கல்வித்துறையில் சீர்திருத்தம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மாணவர்களின் மனதைச் சிதைக்கும் வகையில் அமைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க் கையை விமர்சிப்பதன் மூலம் கல்வியில் ஏற்பட்டுள்ள பாரிய குறைபாடுகளை

07

# இலங்கை விரைவாக மீண்டெழ சீனா முழு ஆதரவை வழங்கும்!

## விஜித ஹேரத்திடம் உறுதியளித்தார் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ

கொழும்பு, ஜன. 13

இலங்கை விரைவான மீட்சிக்கான சரியான பாதையில் உள்ளது என்றும், அந்த நோக்கத்திற்காக சீன அரசாங்கம் அதன் முழு ஆதரவையும் வழங்கும் என்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ குறிப்பிட்டார் என வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

07



# எம்.பி.க்கள் ஓய்வூதியம் இரத்து செய்யும் சட்டமூலம் 6 வாரங்களில் நிறைவேற்றம்

கொழும்பு, ஜன. 13

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய முறையை இரத்து செய்வதற்கான சட்டமூலம் அடுத்த 6 வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

அரசியலை இலாபம் ஈட்டும் தொழிலாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதும், பொதுச் சேவையில் நேர்மையை ஊக்குவிப்பதும் இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அத்துடன் கொழும்பில் உள்ள 4 அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் இன நீதித்துறை சார்ந்த பணிகளுக்காக

07

# ஜன. 15 வரை மழை தொடரும்

யாழ்ப்பாணம், ஜன. 13

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் பரவலான மழை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகள் அதற்கேற்ற வகையில் தங்களுடைய அறுவடைச் செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்வது சிறந்தது.

மத்திய, மேல், சபரகமுவா, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கும் எதிர்வரும் 15.01.2026 வரை மிதமானது முதல் சற்று

07

# யாழ்ப்பாணத்திலிருந்தே ஏற்றுமதிக்கு முழு ஒத்துழைப்பு வழங்க அரசு தயார்!

## வடக்கு ஆளுநரிடம் சுங்க பணிப்பாளர் நாயகம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணத்திலிருந்தே ஏற்றுமதி நடவடிக்கைகளை நேரடியாக முன்னெடுப்பதற்குரிய ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம் தயாராக உள்ளது, என அதன் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் உறுதியளித்தார்.



வடக்கிலிருந்து நேரடியாக ஏற்றுமதி செயல்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில்,

07

# பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவை நீக்க ஜனாதிபதியை வலியுறுத்துக

## மகாநாயக்கரிடம் பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 13

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவு சட்டமானால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும். இந்த சட்டவரைவை நீக்க கோரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த வேண்டும் என்று முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரிடம் கோரினார்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் கண்டி அஸ்கிரிய பீடத்துக்கு சென்று மகாநாயக்க தேரரை சந்தித்து கலந்துரையாடும்போது மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய கல்வி கொள்கை பல்வேறு தரப்பிலும் பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்பதற்காக அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது.

பொதுமக்களுடன் எவ்விதமான வெளிப்படையான கலந்துரையாடல்களும்

07

# அமைச்சரவையில் மாற்றம் வேண்டும்!

## எல்லே குணவன்ஸ தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 13

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை கல்வி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி அமைச்சரவையில் மாற்றம் செய்யவேண்டும் என "நாட்டை பாதுகாப் போம்" தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ஸ தேரர் கோரிக்கை

07

# கல்வி மறுசீரமைப்பு வேண்டாம் போராட்டத்தில் குதித்தார் விமல்

கொழும்பு, ஜன. 13

கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று முதல் தொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கல்வி அமைச்சுக்கு முன்பாக அவர் நேற்று காலை முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

கல்வி அமைச்சு புதிய கல்வி சீர்த்திருத்தத்தை

07

# தன் தோல்விகளுக்கான பழியை அதிகாரிகள் மீது சுமத்தும் அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

அரசாங்கம் தனது தோல்விகளுக்கான பழியை அரச அதிகாரிகள் மீது சுமத்தும் கலாசாரத்தை ஆரம்பித்துள்ளது. அமைச்சர்கள் தமது பொறுப்புகளில் இருந்து நழுவிச் செல்வதால், செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் தீர்மானங்களை எடுக்கப் பயப்படுகின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள்

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு உயர் தொழில்நுட்ப ஸ்கானர்களை சுங்கத்துக்கு வழங்கிய அவுஸ்திரேலியா

யாழ்ப்பாணம், ஜன. 13

அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கை சுங்க திணைக்களத்துக்கு 2 உயர் தொழில்நுட்ப ஸ்கானர்களை வழங்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, அவுஸ்திரேலிய தூதுவர் மேத்யூ டக்வொர்த், இலங்கை சுங்க இயக்குநர் ஜெனரல் சீவலி அருகோடாவிடம் ஸ்கானர்கள் அதிகாரபூர்வமாக ஒப்படைத்தார்.

இந்த நிகழ்வில் அவுஸ்திரேலிய சுங்க இயக்குநர் ஜெனரல் போல் எட்வர்ட்ஸ், அவுஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் பயன்படுத்துவதற்காக அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கை சுங்கத்திடம் குறித்த 2 ஸ்கானர்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 67,000 சுற்றுலா பயணிகள் எட்டு நாள்களில் வருகை

கொழும்பு, ஜன. 13

2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இலங்கை சுற்றுலாத்துறை பெரும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

ஜனவரி மாதத்தின் முதல் 08 நாட்களில் மட்டும் 67,762 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இந்தியா தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. மொத்த வருகையில் 17.0 வீதமானோர் இந்தியர்களாவர். இதன்படி, முதல் 8 நாட்களில் 11,367 இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி முழுவதும் இலங்கைக்கு 252,761 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். மேலும், 2025ஆம் ஆண்டு 2,362,521 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் 30 இலட்சம் சுற்றுலாவிகளை ஈர்ப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### டித்வா பேரழிவு காரணமாக

# 8 வைத்தியசாலைகளுக்கு ரூ. 790 மில்லியன் இழப்பு

கொழும்பு, ஜன. 13

"டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட வானிலை பேரழிவு காரணமாக எட்டு வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய மையங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் 790 மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய மையங்களை அவற்றின் தற்போதைய இடத்தில் நிறுவ முடியாததால், சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது நகரத்தில் வேறு இடத்தில் அவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் உள்ள கந்தேகெதர மாவட்ட வைத்தியசாலை, ஸ்பிரிங் வேலி பத்தேகம மாவட்ட வைத்தியசாலை, லிந்துலை மாவட்ட வைத்தியசாலை, மத்திய மாகாணத்தில் உள்ள வத்தேகம மாவட்ட வைத்தியசாலை, வடமேற்கு மாகாணத்தில் உள்ள இதுல்கொடகந்த மாவட்ட வைத்தியசாலை, கலகன்வத்த ஆரம்ப சுகாதார மையம், சில்மியாபுர ஆரம்ப வைத்திய மையம் மற்றும் மத்திய மாகாணத்தில் பதுளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவை முற்றிலுமாக அழிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார மையங்களாகும்.

வத்தேகம மாவட்ட வைத்தியசாலையே அதிக இழப்பை சந்தித்துள்ளது. குறித்த வைத்தியசாலையின் இழப்பு ரூ. 1710 மில்லியனாகும்.

லிந்துலை மாவட்ட வைத்தியசாலை ரூ. 1410 மில்லியன் ரூபா நட்டத்தை சந்தித்துள்ளது. அதே நேரத்தில் கந்தேகெதர மற்றும் ஸ்பிரிங் வேலி வைத்தியசாலைகள் தலா 1200 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான இழப்பை சந்தித்துள்ளன. (அ)

# ஜனாதிபதி வருகையை முன்னிட்டு செத்பார் செல்லும் வீதி சீரமைப்பு

மன்னார், ஜன. 13

மன்னார் மாவட்டத்தில், மன்னார் தபாலகத்தில் இருந்து செத்பார் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்படும் நிலையில் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வீதியை புனரமைப்பு செய்ய பல தரப்பினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும், எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்தி வந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் வியாழக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் குறித்த வீதி சீரமைக்கப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் வியாழக்கிழமை காற்றாலை மின்கோபுர திறப்பு விழா, புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு என்பவற்றில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

அதனால் வீதியில் காணப்படும் பாரிய குழிகளை நிரப்பி செப்பனிடும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நீர்ச்சறுக்கலுக்கு சிறந்தது இலங்கை

### அமெ. தூதுவர் ஜூலி சங்

கொழும்பு, ஜன. 13

நீர்ச்சறுக்கலுக்கு சிறந்த இடமாக இலங்கை திகழ்கிறது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பதிவில்-

நான் கலிபோர்னியாவில் பிறந்த பெண்ணாக இருந்தாலும் நான் இதற்கு முன்னர் ஒருபோதும் நீர்ச்சறுக்கல் விளையாடியதில்லை. ஆனால், எனது பயத்தை ஒரங்கட்டி கடைசியாக இலங்கையில் நீர்ச்சறுக்கல் செய்தேன். எனக்கு பொறுமையுடன் பயிற்றுவித்தவருக்கு நன்றி. ஒரு தூதுவராக மட்டுமல்லாமல், மீண்டும் ஒரு சுற்றுலாப் பயணியாக இலங்கை வந்து மேலும் பயிற்சிகளைப் பெற விரும்புகிறேன். இலங்கையின் தெற்கு கடற்கரை பகுதி நீர்ச்சறுக்கல் விளையாட்டிற்கு உலகின் மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாகும்-என அவர் பாராட்டியுள்ளார்.

அவரின் இந்த அனுபவ பகிர்வு இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு மிகப்பெரிய அங்கீகாரமாகும். (அ)

# முன்பள்ளி மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

வேலணை பிரதேச சபை முன்பள்ளியின் மாணவர் கௌரவிப்பும் கலைவிழாவும் நேற்று வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமார், சிறப்பு விருந்தினராக வேலணை சரஸ்வதி வித்தியாலய பிரதி அதிபர் திருமதி ம.கணேசன், உள்ளிட்டவர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# வைத்தியர்களுக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஜன. 13

வேலணை வைத்தியசாலையில் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்தியர்களுக்கு வேலணை வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் சேவையை கௌரவித்து நன்றி கூறி பிரியாவிடை செய்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரியாவிடை நிகழ்வில் வைத்தியர் கபிலன் மற்றும் வைத்தியர் அபிரா ஆகிய இரு வைத்தியர்களுக்கே பிரியாவிடையுடனான நன்றிகூரல் வழங்கப்பட்டது.

வேலணை வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பிரதேசத்தின் அரசியல் பிரமுகர்கள், நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் என பலர் கலந்து வைத்தியர்களின் சேவையை நினைவு கூர்ந்து பாராட்டியிருந்ததுடன், பொன்னாடை போத்தி நினைவுப் பரிசில்களை வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




# முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 80,614 அபாயகர வெடிபொருட்கள் அகற்றல்

முல்லைத்தீவு, ஜன. 13

வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்டு வரும் ஸார்ப் நிறுவனம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில், 37 இலட்சத்து 21 ஆயிரத்து 430 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து, 80 ஆயிரத்து 614 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக, ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்த அறிக்கையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வட பகுதியில், ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாடுகளின் நிதி உதவியுடன் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனம், 2016 நவம்பர் முதல் 2026 ஜனவரி வரையான காலப்பகுதியில், தாம் மேற்கொண்ட பணிகள் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு, மாங்குளம், கொக்காவில் ஆகிய பகுதியிலும்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள, முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும், கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது.

அந்தவகையில், 37 இலட்சத்து 21 ஆயிரத்து 430 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து, 80 ஆயிரத்து 614 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளது.

ஸார்ப் நிறுவனம், புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி மற்றும் ஆனையிறவிலும், தற்போது துரித கதியில் பணிகளை முன்னெடுத்து வருகின்றது என ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.01.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்நாட்டின் எல்லை

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருக்கின்றார். இதற்கு முன்னரும் அவர் பல தடவைகள் கடிதம் எழுதியிருக்கின்றார். ஆனால், அப்போது எழுதிய கடிதங்களுக்கும் இப்போது எழுதியிருக்கும் கடிதத்துக்கும் இடையில் ஒரு வேறுபாடு உண்டு.

இலங்கையின் வடக்கு மாகாண கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருப்பது தவறு - எனவே, அவர்களின் விடுதலையில் மத்திய அரசு தலையிட வேண்டும் - அவர்களின் உடைமைகளை ஒப்படைக்குமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் - இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர். இதில் மத்திய அரசாங்கம் பாராமுகமாக இருக்கக்கூடாது - இப்படித்தான் ஸ்டாலினின் முன்னைய கடிதங்கள் இருந்தன.

இப்போது நீண்டகாலத்துக்குப் பின்னர், ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வில் இந்திய மத்திய அரசாங்கம் தலையிட வேண்டும் - இலங்கையில் கொண்டுவரப்படும் அரசமைப்பு சீர்திருத்தங்களால் இலங்கை தமிழர்கள் பாதிக்கப்படப் போவதாக தெரிவித்திருக்கிறார். அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குழுவினர் தமிழ்நாட்டுக்கு சென்று, ஸ்டாலின் உள்ளடங்கலாக பலரை சந்தித்திருந்தனர். இதன் விளைவாகவே ஸ்டாலின் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

தேர்தல் அரசியல் கண்ணோட்டத்தில் நோக்கினால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அரசியல் அரங்கில் தீவிரமாக செயல்பட்டு வருவதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு இது பயன்படலாம். ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைத்து நோக்கினால் இது புதிய விடயமல்ல - பல தசாப்தகால அரசியல் அணுகுமுறை. இது எந்தவொரு சாதகமான விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை.

தமிழ்நாட்டை கொண்டு இந்தியாவின் வெளிவிவகார கொள்கையை மாற்றலாம், அதன் ஊடாக கொழும்புமீது அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என்பது ஒரு பழைய நம்பிக்கை. ஆனால், இங்கு கவனிக்கத் தவறுகின்ற ஓர் அடிப்படையான விடயம் உண்டு - அதாவது, தமிழ்நாட்டால் இந்தியாவின் வெளிவிவகார அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. ஆனால், இந்திய ஆளும் தரப்புக்குத் தேவைப்பட்டால் தமிழ்நாட்டை ஒரு துருப்புச் சீட்டாக அவர்கள் பயன்படுத்துவார்கள்.

ஈழத் தமிழர் அரசியலானது, ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபோது அவ்வாறானதோர் அணுகுமுறையைத்தான் அப்போதைய இந்திரா காந்தி அரசாங்கம் கைக்கொண்டது. ஆறு கோடித் தமிழ் மக்களை கொண்டிருக்கும் நாங்கள், இந்தியாவுக்கு அருகில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போது அமைதியாக இருக்க முடியாது என்னும் சுலோகத்தைத்தான் இந்திரா தூக்கினார். அன்றைய அரசியல் சூழலில் இலங்கைமீது தலையீடு செய்வதற்கு அவ்வாறானதொரு வாதம் தேவைப்பட்டது. இந்தியாவுக்குத் தேவைப்படும்போது - குறிப்பாக சில கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாட்டு அரசியலை பயன்படுத்தியிருக்கின்றனர். அன்றைய சூழலில் இலங்கைமீது கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்கே அது தேவைப்பட்டது. மற்றும்படி தமிழ்நாடு ஓர் உள்நாட்டு விவகாரம் மட்டும்தான்.

மேலும், அன்றைய சூழலில் கருணாநிதி, எம். ஜி. இராமசந்திரன் (எம். ஜி. ஆர். ) போன்ற தமிழ்நாட்டு தலைவர்கள் அகில இந்தியளவில் செல்வாக்குமிக்கவர்களாக இருந்தனர். ஆனால், இப்போது அப்படியான நிலையும் இல்லை. ஜெயலலிதா ஏற்கனவே தமிழீழத்துக்கு ஆதரவாக ஒரு பிரேரணையையும் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறார். இதனை விடவும் ஒரு தமிழ்நாட்டு அரசியல்வாதி என்ன செய்துவிட முடியும்? ஒருவேளை ஐம்பது இலட்சத்துக்கு மேல் தமிழ்நாட்டு மக்கள் வீதிகளில் இறங்குவார்களாக இருந்தால் ஒருவேளை மத்திய அரசு திரும்பிப் பார்க்கலாம். ஆனால், அவ்வாறானதொரு விடயம் இடம்பெற்றால் முதலில் அதனால் பாதிக்கப்படப்போவது தமிழ்நாட்டு ஆட்சிதான்.

# மின் கட்டணத்தில் 2 வீத மேலதிக அறவீடு அசௌகரியத்தை ஏற்படுத்தும் செயலல்ல!

## வலுசக்தி அமைச்சு விளக்கம்

கொழும்பு, ஜன. 13

வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகளினால் ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கு, பாவனையாளர்களின் மின்சார கட்டணங்களில் 2 வீதம் அறவிடப்படும் என்ற அரசாங்கத்தின் முன்மொழிவு, மின்சார பாவனையாளர்களுக்கு மேலும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் செயல்பாடல்ல என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், நடைமுறையில் உள்ள செலவு பகிர்வை, உத்தியோகபூர்வமாகவும் வெளிப்படையாகவும் ஒழுங்குபடுத்தும் முயற்சி எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபலா இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகளால் ஏற்படும் செலவுகளை உரிய நகர மற்றும் மாநகர சபைகள் ஏற்க வேண்டும்.

ஆனால் பல உள்ளூராட்சி அமைப்புகள் இதுவரை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய மின்சார கட்டணங்களைச் செலுத்தத் தவறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, செலுத்தப்படாத மின்சார கட்டணங்கள் மின்சார சபையின் இழப்பாக கணக்கிடப்படுகின்றன. இந்த இழப்புகள் மின்சார சபையின் மொத்த இழப்புகளில் 2 வீதம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளும் மின்சார கட்டணத் திருத்தங்கள் மூலம் இந்த இழப்புகள் மின்சார பாவனையாளர்களிடம் இருந்து பெறப்படுப்படுவதாகவும் அவர் கூறினார்.

# ஓட்டோக்கள் திருட்டுடன் தொடர்பு சந்தேகபர்கள் மூவர் கைது

கொழும்பு, ஜன. 13

முச்சக்கர வண்டி திருட்டுகளுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை நுகேகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

2025 டிசெம்பர் 28 அன்று மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்ட முச்சக்கர வண்டி திருட்டு தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து ஜனவரி 10 அன்று இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் 11 ஆம் திகதி மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திருடப்பட்ட முச்சக்கர வண்டி குருவிட்ட பகுதியில் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளில் யட்டியந்தோட்டை, பலாங்கொடை, பதுளை, பத்தரமுல்லை ஆகிய இடங்களிலும் திருடப்பட்ட 10 முச்சக்கர வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைதான 30, 32, 46 வயதுடைய சந்தேகநபர்கள் களனி, அம்பலாந்தோட்டை மற்றும் பரகடுவ பகுதிகளை சேர்ந்தவர்கள். சந்தேக நபர்கள் திருடப்பட்ட வாகனங்களின் நிறம், செசி எண்கள் மற்றும் இயந்திர எண்களை மாற்றிய மைத்து, போலி எண் தகடுகள் மற்றும் போலி ஆவணங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தனியார் வங்கி வழங்கும் கடன் உயர்வு

கொழும்பு, ஜன. 13

தனியார் வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகை அதிகரித்துள்ளது.

அதன்படி, வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் தொகை, கடந்த 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 262 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

அத்துடன், கடந்த வருடத்தில் தனியார் கடன் வழங்கல் 26 வீதம் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

இதன் மூலம் மொத்த தனியார் கடன் வழங்கல் முதல் முறையாக பத்தாயிரத்து 29 பில்லியன் ரூபாயைக் கடந்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. (அ)

# தொழிலதிபர் பிரியமாலிக்கு பிடியாணை


கொழும்பு, ஜன. 13

தொழிலதிபர் திலினி பிரிய மாலிக்கு எதிராக ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அவருக்கெதிரான வழக்கில் முன்னிலையாகத் தவறியமைக்காக ஹோமாகம அவருக்கு பிடியாணை பிறப்பித்து நீதிவான் உத்தரவிட்டார்.

பிரதிவாதி திலினி பிரியமாலி சார்பாக எந்த சட்டத்தரணியும் வழக்கில் முன்னிலையாகததால் வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 13 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 29
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : தசமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்** — கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**இடபம்** — எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சூட்சுமங்களை சொல்லித்தருவார்.

**மிதுனம்** — குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி நல்லவர்கள், வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள்.

**கடகம்** — பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**சிம்மம்** — சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**கன்னி** — இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பயணங்கள் சிறப்பாக அமையும். உற்சாகமான நாள்.

**துலாம்** — ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். விமர்சனங்களை ஏற்றுகொள்வது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**விருச்சிகம்** — எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாபரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும்.

**தனுசு** — குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்** — எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சிந்தனை திறன் பெருகும்.

**கும்பம்** — உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள்.

**மீனம்** — சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சி வசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

# கிளிநொச்சியில் புதையல் தோண்டிய 4 மின்சார சபை ஊழியர்கள் கைது!

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சி மின்சார சபை சுற்றுலா விடுதியில் புதையல் தோண்டிய நான்கு மின்சார சபை ஊழியர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி அறிவியல் நகர் சிறப்பு அதிரடிப்படை முகாமின் டி. ஆர். எல். அத்துக்கோரல அதிகாரி உள்ளிட்ட குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மதியம் 12. 45 மணியளவில் கிளிநொச்சி மின்சார சபை சுற்றுலா விடுதி பகுதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, விடுதி பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த அநுராதபுரம் மின்சார சபையில் பணியாற்றும் 4 ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பொருட்களை விசேட அதிரடிப் படையினர் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அரசு நிலத்தில் புதையல் தேடும் நோக்கத்துக்காக உரிமம் இல்லாமல் அகழ்வாராய்ச்சி செய்தல் மற்றும் அரசு சொத்தை தவறாக பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர்கள் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

(எ-08)





## சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜனன தின நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஜன. 13

சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜனன தின நிகழ்வு வவுனியா ரயில் நிலைய வீதியிலுள்ள அவரது திருவுருவச்சிலையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவேகானந்தரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

மேலும், தமிழ்மணி அகளங்கனாலும் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலை மாணவ, மாணவிகளாலும் சுவாமி விவேகானந்தர் தொடர்பான நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்பட்டன.

வவுனியா மாநகர சபை ஆணையாளர் மே. சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப. சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், மாநகர சபை செயலாளர் அ. பாலகிருபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

## மருதங்கேணியில் ஐஸ் போதையுடன் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 13

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் காலை மருதங்கேணி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மருதங்கேணி கடற்கரை பகுதி முழுவதும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மருதங்கேணி கடற்கரை பகுதியில் வாடி ஒன்றில் தங்கியிருந்து கடற்றொழில் செய்யும் மன்னார் பேசாலை பகுதியைச் சேர்ந்த நபரின் உடைமையில் இருந்து 4.780 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் ஐஸ் போதைப்பொருளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த சந்தேக நபரை தடுத்துவைத்து விசாரணை செய்ய மருதங்கேணி பொலிஸார் நீதிமன்றில் அனுமதி கோரிய நிலையில் மூன்று நாட்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் அனுமதி வழங்கினார்.

(எ-08)

## நாவலர் கலாசார மண்டபத்தில் புதிய கலை வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவகத்தின் சிறீ ல சிறீ ஆறு முக நாவலர் பயிற்சி நிலையம் ஊடாக நாவலர் கலாசார மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் ய. அநிருத்தனனின் வழிகாட்டலுக்க மைவாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச கலைவகுப்புகளை நடத்தி வருகிறது.

இந்தக் கலை வகுப்புகளின் புதிய பிரிவுகள், நாவலர் கலாசார மண்டப பொறுப்பதிகாரி, அபிவிருத்தி உத்தி யோகத்தர் எஸ். உதயபாலனின் மேற்பார்வையில் ஆரம் பமாகவுள்ளன.

அந்த வகையில் ஆண், பெண் இரு பாலாருக்குமான யோகாசனம், மிருதங்கம், வயலின், கர்நாடக சங்கீதம் முதலான வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளன.

மூன்று மாத காலப் பயிற்சி நிறைவில் யோகாசனச் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வகுப்புகளில் இணைந்து கற்றுக்கொள்ள விரும்புப வர்கள் நேரடியாகவோ அல்லது [illegible] 0587 தொலை பேசி எண் மூலம் தொடர்பினை ஏற்படுத்தி பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக் களம் அறிவித்துள்ளது.

(எ)

## வன்னியின் கண்ணீர் அமைப்பால் பொங்கல் பொருட்கள் வழங்கல்



யாழ்ப்பாணம், ஜன. 13

வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமத்தில் வன்னியின் கண்ணீர் அமைப்பால் 37 குடும்பங் களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கப்பட் டன. நேற்று முன்தினம் பிற்பகல் பொற்பதி கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சி. குகதாசன் தலைமையில் பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், வன்னியின் கண்ணீர் அமைப்பு பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6 ஆங்கில புத்தக சர்ச்சை: குற்றவாளி கைதாகாதமை ஏன்?

## நளின் பண்டார கேள்வி

கொழும்பு, ஜன. 13

தரம் 6 ஆங்கில அச்சுப்புத்தகத்தில் சர்ச்சைக்குரிய வலைத்தலத்தை உட்புகுத்திய நபர் யார் என்பதை இனம் கண்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். அப்படியாயின் குற்றப்புலனாய்வு பிரிவு அந்த நபரை கைது செய்து ஏன் இதுவரை விசாரணை மேற்கொள்ளவில்லை என கேட்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய ஆங்கில புத்தக தொகுப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலசக் கல்வியை பாதுகாக்குமாறு தெரிவித்து கூட்டு எதிர்க்கட்சி மத்துகமவில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும்போது, அதற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹொட்டஹச்சி, பெண்கள் சிலரை ஒன்றிணைத்துக்கொண்டு பிரதமரை பாதுகாத்துக்கொள்ள ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். உண்மையில் அந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரதமரை பாதுகாப்பதற்கு முன்னர் உகண்டாவில் இருக்கும் பணத்தை கொண்டுவர தேவையில்லையா என மக்களை கேள்வி கேட்டு வந்தார். அதனால் அவர் மக்களுக்கு பொய் வாக்குறுதி



வழங்காமல், உகண்டாவில் இருக்கும் பணத்தை நாட்டுக்கு கொண்டு வரவே ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும். அதனால் தற்போது ஆர்ப்பாட்டம் செய்யாமல் அரசாங்கத்தை பொறுப்பேற்றால், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற செயற்படவேண்டும்.

அத்துடன் கல்வி அமைச்சராக பிரதமர் ஹரிணி, கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்வதாக தெரிவித்து தரம் 6 மாணவர்களின் பாடப்புத்தகத்தில் ஏன் இந்த சர்ச்சைக்குரிய வலைத்தளத்தை புகுத்தினார். இது எதிர்பார்க்காமல் இடம்பெற்ற ஒன்றாக இருக்க முடியாது. இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பும்போது, இந்த சர்ச்சைக்குரிய வலைத்தளத்தை பாடப்புத்தகத்தில் உட்புகுத்திய நபரை இனம் கண்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

அதேநேரம் நாலக்க கலுவெவ இதற்கு முன்னர் இந்த சர்ச்சை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார். அவரின் இந்த முறைப்பாட்டுக்கமைய, குற்றப் புலனாய்வு பிரிவு அல்லது வேறு விசாரணைப் பிரிவினர், கல்வி அமைச்சின் செயலாளர் இனம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நபரை அழைத்து இதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதா என கேட்கிறோம். நாங்கள் அறிந்த அளவில் அவ்வாறான எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

அதனால் சர்ச்சைக்குரிய வலைத்தளத்தை பாடப்புத்தகத்தில் புகுத்திய நபர் இனம் காணப்பட்டிருந்தால், அவரை கைதுசெய்து ஏன் இதுவரை விசாரணை மேற்கொள்ளவில்லை. அப்படியானால் குறித்த நபர் இந்த நடவடிக்கையை அவர் தனது அபிப்பிராயத்தின் பிரகாரம் உட்புகுத்தவில்லை. மாறாக அவருக்கு கிடைத்த உரத்துவுக்கமையவே மேற்கொண்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது-என்றார். (அ)

# மீண்டும் செயற்பட தொடங்கியது நுரைச்சோலை மின் பிறப்பாக்கி!

கொழும்பு, ஜன. 13

பராமரிப்புப் பணிகள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் உள்ள ஒரு மின் பிறப்பாகி மீண்டும் வழக்கம் போல் செயல்படத் தொடங்கியுள்ளது.

இருப்பினும், அந்த மின் பிறப்பாக்கியால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இன்னும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படவில்லை.

அடுத்த சில நாட்களில் அது தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள 03 மின் பிறப்பாக்கிகள் மூலம் 900 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்சார கட்டமைப்புக்கு சேர்க்கப்படுகிறது.

அதே நேரத்தில் தற்போது ஒரு மின் உற்பத்தி நிலையம் மட்டுமே தேசிய மின்சார கட்டமைப்புக்கு மின்சாரத்தை பங்களிக்கிறது.

எனினும், மற்றொரு மின் பிறப்பாக்கி இன்னும் செயல்படாமல் இருப்பதாகவும், அந்த மின் பிறப்பாக்கியை இயல்பு நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (அ)

# இந்திய பிரஜை ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 13

சட்டவிரோத முறையில் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட 2,400 சிகரெட்டுகளுடன் இந்திய பிரஜை ஒருவர் விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையில் குறித்த நபர் 2,400 சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாம்பவம் தொடர்பில் 56 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கார் - வான் விபத்து; மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 13

புத்தளம்-கொழும்பு பிரதான வீதியில் முந்தலம் பகுதியில் காரொன்றும் வானொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின்போது காரில் பயணித்த இரண்டு பெண்களும் ஒரு ஆணும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சகல வாகனப் பதிவுகளுக்கும் 'ரின்' இலக்கம் கட்டாயமானது!

கொழும்பு, ஜன. 13

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தகவலின்படி, 2026 ஜனவரி 5 முதல் அனைத்து வாகனப் பதிவுகள் மற்றும் உரிமை பரிமாற்றங்களுக்கும் வரி செலுத்துவோர் அடையாள எண்ணை (TIN) சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்கள், டிராக்டர்கள், டிராக்டர் ட்ரெய்லர்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தவிர அனைத்து வாகனங்களுக்கும் இந்தத் தேவை பொருந்தும்.

அவற்றை தவிர ஏனைய அனைத்து புதிய வாகனங்களின் உரிமையையும் பதிவுசெய்து மாற்றும்போது தொடர்புடைய புதிய உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை எண் அல்லது வணிகப் பதிவு எண் மற்றும் வரி செலுத்துவோர் அடையாள எண்ணை தொடர்புடைய தரவுத்தள அமைப்புகளில் உள்ளிடுவது கட்டாயமாகும்.

சில மோட்டார் போக்குவரத்து சேவைகளுக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் தேவை முதன்முதலில் 2025 ஏப்ரல் 15 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் புதுப்பிக்கப்பட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவுத்தளத்தில் முழு அமுலாக்கம் 2026 ஜனவரி 5 அன்று தொடங்கியது. (அ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதுளை, கண்டி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு

*கொழும்பு, ஜன. 13*

மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ள போதிலும் பதுளை, கண்டி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை மேலும் நீடிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாத இறுதியிலும் டிசெம்பர் மாத முதல் வாரத்திலும் பெய்த கடும் மழை காரணமாக பல பகுதிகள் இன்னும் அபாயகரமான நிலையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால், பருவ மழையுடன் கூடிய சிறிய அளவிலான மழை பெய்தாலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, பின்வரும் மாவட்டங்களில் வழங்கப்பட்டிருந்த முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது:

மாவட்ட ரீதியான விவரங்கள் வருமாறு,

**பதுளை மாவட்டம்:**

லுணுகலை, மீகாககிவுல, வெலிமடை, கந்தகெட்டிய, ஹாலிஎல, பதுளை, ஊவா பரணகம மற்றும் பஸ்ஸறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள்.

**கண்டி மாவட்டம்:**

மினிப்பே மற்றும் உடுதும்பறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள்.

**மாத்தளை மாவட்டம்:**

வில்கமுவ, உக்குவெல, அம்பகங்கா கோரளை, ரத்தோட்டை, லக்கல மற்றும் பல்லேகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள்.

**நுவரெலியா மாவட்டம்:**


நில்தண்டாஹின்ன, வலப்பனை, மதுரட்ட மற்றும் ஹங்குரன்கெத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள்.

நிலவும் சூழல், மழைவீழ்ச்சியின் அளவு மற்றும் அபாயகரமான இடங்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த அறிவிப்புகள் எதிர்காலத்தில் மாற்றமடையக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பெய்த மழையால் பல பகுதிகளில் மண்சரிவுக்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டுள்ளதாகவும் சிறிய மழை பெய்தாலும் அந்த இடங்கள் மீண்டும் அபாய நிலையை எட்டக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். எனவே, மக்கள் தமது சூழல் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

# இந்தியாவால் நிர்மாணிக்கப்பட்ட முதல் பெய்லி பாலம் திறக்கப்பட்டது





*கண்டி, ஜன. 13*

100 அடி நீள பெய்லி பாலத்தை இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன மற்றும் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் விஜேரத்னவும் கலந்து கொண்டார்.

இலங்கையின் மத்திய மாகாணத்துக்கும் ஊவா மாகாணத்துக்கும் இடையிலான ஒரு முக்கிய நில இணைப்பை மீட்டெடுக்கும் வகையில், கண்டி - ராணலை வீதியிலுள்ள பி-492 வீதியில் இந்திய இராணுவத்தின் 19ஆவது பொறியாளர் படைப் பிரிவால் இந்தப் பாலம் அமைக்கப்பட்டது.

டித்வா புயலுக்குப் பின்னர் மீள் கட்டமைப்புக்கான இந்தியாவின் 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகுப்பின் கீழ் திட்டங்களை செயல்படுத்துவதற்கான தொடக்கத்தை இந்த நிகழ்வு வெளிப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் ஏனைய பகுதிகளிலும் இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# காத்தான்குடி மீனவர்களின் வாழ்வாதாரம் கடும் பாதிப்பு



*மட்டக்களப்பு, ஜன. 13*

சீரற்ற வானிலை காரணமாக கடல் சீற்றம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் கடல் பயணம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் மிகுந்த அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாக கடலுக்கு செல்ல வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மீனவர்களுக்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில், காத்தான்குடி பிரதேசத்துக்குட்பட்ட ஏத்துக்கால் நதியாவும் பூனொச்சிமுனை துறைமுகங்களையும் சேர்ந்த மீனவர்கள், பல வாரங்களாக கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதனால், தங்களது மீன்பிடி படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி வைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், குறித்த துறைமுகப் பகுதிகளில் இருந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வருமானம் இழந்த நிலையில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சீரற்ற வானிலை தொடர்ந்தால் தங்களது நிலை மேலும் மோசமடையும் என்று மீனவர்கள் தெரிவித்தனர். எனவே, உரிய அதிகாரிகள் தங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# 600 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

*திருகோணமலை, ஜன. 13*

சரோஜா திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்கள் 600 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளக்கோட்டன் மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த திஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், மதத் தலைவர்கள், மாணவர்களின் பாதுகாவலர்கள் உள்ளிட்ட 1200 பேர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பொலிஸ் திணைக்களம் ஊடாக சரோஜா வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-12)

# பேரிடருக்கு பின்னரான சுகாதாரம், டெங்கு ஒழிப்பு தேசிய வேலை திட்டம்

*சம்மாந்துறை, ஜன. 13*

பேரிடருக்குப் பின்னரான சுகாதாரம் மற்றும் டெங்கு ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் மூன்றாவது நாள் நிகழ்வாக அரச மற்றும் தனியார் துறையினரையும் உள்ளடக்கிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் எம். மாஹிரின் வழிகாட்டலில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அண்டிய பிரதேசத்தில் நுளம்பு பெருகும் இடங்களை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி நௌசாத் முஸ்தபா, சம்மாந்துறை குவாஷி நீதிமன்ற நீதிபதி எல். தாஸீம், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆர். ஆஷிக் முஹம்மட், எம். பஹ்மி, எம்.நயிம், ஹாதிக் இப் றாகீம், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார். (எ-06)

# சம்மாந்துறை சிறுவர் பூங்கா நவீனமயப்படுத்தப்படவுள்ளது

*சம்மாந்துறை, ஜன. 13*

சம்மாந்துறை பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை புனரமைத்து நவீன வசதிகளுடன் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் எம். மாஹிர் பூங்காவுக்கு சென்று ஆராய்ந்துள்ளார்.

இதன்போது, பூங்காவின் தற்போதைய நிலைமைகளை அவதானித்த தவிசாளர், அங்கு வருகை தந்திருந்த சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பூங்காவில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களின் தரம் குறித்து பயனாளர்களின் கருத்துக்களும் அறியப்பட்டன.

இந்தத் திட்டத்தின் மூலம் சம்மாந்துறை பிரதேச சிறுவர்களுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் கவர்ச்சிகரமான விளையாட்டு சூழல் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-06)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்

*கொழும்பு, ஜன. 13*

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசையினூடாக காற்று வீசும்.

சிலாபம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் காற்று அடிக்கடி அதிகரித்து வீசக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜன. 15 வரை...

கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை இரவில் வெப்பநிலையில் ஏற்படும் வீழ்ச்சியும், ஈரப்பதன் மாற்றமும் குளிரான வானிலையை ஏற்படுத்துகின்றன. இந்த நிலைமை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் வாய்ப்புள்ளது - என்றார். (அ)

## முரசுமோட்டையில்...

உள்ளாகின.

இதன்போது, காரில் பயணித்த நான்கு பேர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் விசுவமடு பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பொன்னையா பூபாலன், 34 வயதுடைய சந்திரகுமார் சவேந்திரன் புன்னைநீராவி பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் குனதர்ஷன், அதே பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய யுவானி பிரசாத் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (அ)

## கல்வி சீர்திருத்தம்...

மூடிமறைக்க வேண்டாம் என வும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் "மூச்சு" திட்டத்தின் கீழ், கொலன்ன ஆதார மருத்துவமனைக்கு 28 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டின் பிரதான பேசுபொருளாக கல்வி மாறியுள்ளது. கல்வி அமைச்சுப் பொறுப்பிலுள்ளவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் அல்லது அவர்களின் தனிப்பட்ட நடத்தை குறித்து விமர்சிப்பது எமது நோக்கமல்ல. 220 இலட்சம் மக்களின் தனிப்பட்ட சுதந்திரம் மற்றவர்களுக்கு அவசியமற்றது.

ஆனால், இன்று தனிப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி, கல்வியில் எழுந்துள்ள பாரிய நெருக்கடிகளைச் சில தரப்பினர் திட்டமிட்டு மறைக்க முற்படுகின்றனர்.

முறையான கலந்துரையாடல்களின்றி, வெறும் "பவர் பொயின்ட்" காட்சிப்படுத்தல்கள் மூலம் முன்னெடுக்கப்படும் இந்தச் சீர்திருத்தங்கள், 41 இலட்சம் மாணவர்களின் சிந்தனையைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் வகையில் அமைந்துள்ளன.

கல்வித்துறையில் ஆபாசக் கருத்துக்கள் உள்வாங்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. இங்கிலாந்து முறைமை அல்லது ஸ்ரீ ம கல்வி மற்றும் எமது வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கிய சமநிலையான சீர்திருத்தங்களையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கல்வி விபரீதத்திற்குப் பொறுப்பானவர்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். வெறும் அதிகாரிகள் மீது மட்டும் பழியைப் போட்டுவிட்டு அரசாங்கமும், கல்வி அமைச்சரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

கல்விச் சீர்திருத்தத்தின் பின்னணியில் மிகப்பெரிய சதி மறைந்துள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்- என்றார். (அ)

## இலங்கை...

இலங்கைக்கு நேற்று ஒரு குறுகிய பயணமாக வருகை தந்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீயை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைவதாகவும் விஜித ஹேரத் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அமைச்சர் வாங் யீயை வரவேற்று, டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட அவசர அனர்த்த நிவாரணத்துக்காக சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, மேம்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் மறுசீரமைப்பு செயல்முறை குறித்த விவாதத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்ட வீதிகள், ரயில் பாதைகள் மற்றும் பாலங்களை மறுசீரமைப்பது உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டில் சீன அரசாங்கத்தின் உதவியை கோரியுள்ளோம்.

அந்தக் கோரிக்கையில் தான் தனிப்பட்ட முறையில் தலையிடுவதாக அமைச்சர் வாங் யி உறுதியளித்தார். இலங்கை விரைவான மீட்சிக்கான சரியான பாதையில் உள்ளது என்றும், அந்த நோக்கத்திற்காக சீன அரசாங்கம் அதன் முழு ஆதரவையும் வழங்கும் என்றும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார் என பதிவிட்டுள்ளார். (அ)

## எம். பி.க்கள்...

ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கான வரப்பிரசாதங்களைக் குறைத்து, மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## பயங்கரவாத...

இல்லாமல் தான் அரசாங்கம் புதிய கல்வி கொள்கையை அமுல்படுத்தியுள்ளது. நாட்டின் கலாசாரத்துக்கு எதிராக விடயங்களை கல்வி கொள்கையில் உள்ளடக்கினால் அது விளைவுகளை ஏற்படுத்தும்.

புதிய கல்விக் கொள்கை தொடர்பில் அரசாங்கம் சகல தரப்பினருடனும் வெளிப்படையான பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்பட வேண்டும்.

நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டிலும் பாரதூரமானது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு சட்டமானால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும், ஊடக சுதந்திரம் அரச அடக்குமுறைக்கு உள்ளாகும். ஆகவே இந்த சட்டவரைவை நீக்குமாறு மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். (அ)

## அமைச்சரவையில்...

விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்ட மனு ஒன்றில் இதனை தெரிவித்துள்ளார்.

அந்த மனுவில்,

பிரதமரின் தலைமையில் செயல்படுத்தப்பட உள்ள தன்னிச்சையான கல்வி சீர்திருத்தங்கள், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாடு, அதன் மக்கள் மற்றும் புத்த சாசனம் கடும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக அமைந்துள்ளது.

மக்கள் மற்றும் நாட்டின் மீது அக்கறை இல்லாத ஒரு அறியாமை அரசாங்கத்தின் நேரடி விளைவுகள் இறுதியில் தேசத்திற்கும் பொதுமக்களுக்கும் கடும் பாதிப்புக்களை விளைவிக்கும்.

கல்வி சீர்திருத்தங்களில் வெளிப்படைத்தன்மை இல்லை. ஏனெனில் பௌத்த பிக்குகள், பிற மதங்களின் மதகுருமார்கள், ஆசிரியர்கள் அல்லது கல்வி நிபுணர்களிடமிருந்து எந்த கருத்துகளும் கோரப்படவில்லை.

அதன்படி, இந்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த எடுக்கப்பட்ட செயல்முறை அடிப்படையில் குறைபாடுடையது. எனவே செல்லுபடியாகாது.

ஜனாதிபதி திஸாநாயக்க, நாட்டையும், அதன் மக்களையும், புத்த சாசனத்தையும் இந்த அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுப்பார்- என குறிப்பிட்டுள்ளார். (அ)

## யாழ்ப்பாணத்திலிருந்தே...

வடக்கு மாகாண ஆளுநரால் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் மூலம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அக்கோரிக்கைக்கு அமைவான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது வடக்கின் ஏற்றுமதிச் சவால்கள் குறித்துத் தெரிவித்த ஆளுநர்-

வடக்கு மாகாணத்தை சேர்ந்த விவசாய மற்றும் ஏனைய உற்பத்தியாளர்கள், தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குத் தற்போதைய நிலையில் மூன்றாம் தரப்பினரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான இலாபம் குறைவடைகின்றது.

இந்நிலையை மாற்றியமைக்கும் வகையில், ஒரு விவசாயி தனது உற்பத்திப் பொருளைத் தானே நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றவகையிலான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். இத்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த சுங்கத் திணைக்களம் உதவ வேண்டும், என வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட-

இந்தத் திட்டத்துக்குக் கொள்கையளவில் நாம் இணக்கத்தை வெளியிடுகின்றோம். தற்போதுள்ள சில நடைமுறைச் சிக்கல்களைத் துரிதமாகத் தீர்த்து, வெகு விரைவில் யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி ஏற்றுமதிக்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்போம், எனக் குறிப்பிட்டார்.

இதனை எவ்வளவு விரைவாகச் சாத்தியப்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவாக ஆரம்பிப்போம் என ஆளுநர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார்.

இக்கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## மேலும் 15 பெய்லி பாலங்களை இலங்கைக்கு வழங்கும் இந்தியா

கொழும்பு, ஜன. 13

டித்வா சூறாவளியால் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட பாலங்களை புனரமைப்பதற்காக, மேலும் 15 பெய்லி பாலங்களை இந்தியா வழங்கவுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இதனை தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பெய்லி பாலம் பாதிக்கப்பட்ட மற்றும் மலைப் பாங்கான பகுதிகளுக்கான போக்கு வரத்தை இலகுப்படுத்த உதவுகிறது.

அதற்கமைய, கண்டி மற்றும் ராகலை பகுதிகளுக்கு இடையில் நேற்று முன் தினம் திறக்கப்பட்ட பெய்லி பாலத்தை போன்றே மற்றுமொரு பாலம் விரைவில் திறக்கப்படவுள்ளது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியின் மாதர் அணி தலைவியானார் ரோஹினி கவிரத்ன

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சக்தி மாதர் அணியின் தலைவியாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ரோஹினி கவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடிதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச கண்டியில் வைத்து கையளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் இதில் கலந்துகொண்டார். (அ)

## கல்வி மறுசீரமைப்பு...

கைவிடவேண்டும் என்றும், கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தி விமல் வீரவன்ச தொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கல்வி அமைச்சுக்கு முன்னால் கட்சி சகாக்களுடன் திரண்டு வந்து அவர் போராட்டத்தில் குதித்துள்ளார்.

புதிய கல்வி சீர்திருத்தங்களை அரசாங்கம் மீளப்பெறும் வரை போராட்டம் தொடரும் என விமலும், அவரின் சகாக்களும் தெரிவித்துள்ளனர். (அ)

## தன் தோல்விகளுக்கான...

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டுக்கும் மேலாகியுள்ள நிலையில், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்குப் போதிய அனுபவம் கிடைத்துள்ளது.

சுமார் 40 இலட்சம் மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாகப் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். அரச முதலீடுகள் வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாகச் சமூகத்தின் ஒரு பிரிவினரிடையே பணப்புழக்கம் முற்றாக ஸ்தம்பித்துள்ளது.

இதனால் கிராமப்புறங்களுக்குப் பணம் சென்றடையும் செயல்முறை செயலிழந்து, கிராமப்புற சமூகம் கடனில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் உரம் மற்றும் விதைகளைப் பெற்றுக் கொள்ளக் கடன் சங்கங்களை நாட வேண்டியுள்ள அதேவேளை, நகர்ப்புற மக்கள் கடன் அட்டைகளின் உதவியுடன் வாழ்கின்றனர்.

இதுவே நாட்டின் இன்றைய யதார்த்தமாகும். மறுபுறம், நாடு பாரிய நிர்வாக நெருக்கடியை நோக்கித் தள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக, நாட்டின் நிதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில் கணக்காய்வாளர் நாயகம் பதவி மிக முக்கியமானது.

அரசியலமைப்பின் 153ஆவது பிரிவின் கீழ் இப்பதவி சுயாதீனமானது என்பதுடன், அவர் ஜனாதிபதிக்குக் கீழ் இயங்குபவர் அல்லர் மாறாக பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்பு கூறவேண்டியவர்.

கடந்த காலங்களில் எந்தவொரு அரசாங்கமும் இப்பதவிக்குத் தகுதியற்றவர்களை நியமிக்கவோ அல்லது அத்துமீறிய தலையீடுகளைச் செய்யவோ முற்படவில்லை.

ஆனால், எதிர்க்கட்சியிலிருந்தபோது கணக்காய்வு மற்றும் நிர்வாகத் தூய்மை பற்றிப் பேசிய தேசிய மக்கள் சக்தி, தற்போது அதிகாரத்திற்கு வந்தவுடன் கணக்காய்வாளர் நாயகம் பதவியுடன் விளையாடுகின்றது.

ஜனவரி 1ஆம் திகதி புதிய நிதியாண்டு ஆரம்பமாகியுள்ள போதிலும், கணக்காய்வாளர் நாயகம் இல்லாததால் முக்கிய நிதித் தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் முடங்கியுள்ளன. இது கோப் மற்றும் கோபா குழுக்களின் செயற்பாடுகளையும் முழுமையாகப் பாதித்துள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஹறிணிக்கு எதிரான பிரேரணை 20 ஆம் திகதி கையளிக்கப்படும்?

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, ஜன. 13

பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் 20 ஆம் திகதியளவிலேயே கையளிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கடந்த 9 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டிருந்தது.

இதனையொட்டி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்தும் திரட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏனைய சில பாடங்களிலும் உள்ள சிக்கல்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது என அறியமுடிகின்றது.

எனவே, இது குறித்த தகவல்களையும் சேகரித்து காத்திரமானதொரு பிரேரணையை முன்வைக்கும் நோக்கிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை தாமதிக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

தரம் 6 ஆங்கில பாடத்தில் வயது வந்தோர் வலைத்தளத்திற்கான இணைய இணைப்பு சேர்க்கப்பட்ட விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இதனை மையப்படுத்தியதாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்குரிய ஏற்பாடு இடம்பெறுகின்றது.

எனினும், கல்வி மறுசீரமைப்பை சீர்குலைப்பதற்கான எதிரணிகளின் சதி நடவடிக்கை இதுவென நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளுங்கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனவரி மாதத்துக்குரிய இரண்டாவது வார பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

(அ)

# கல்விச் சீர்த்திருத்தங்கள் குறித்து ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு

## ஜோசப் ஸ்டாலின் தகவல்

கொழும்பு, ஜன. 13

அரசாங்கத்தின் தற்போதைய கல்வி சீர்த்திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தின் கல்வி சீர்த்திருத்தங்கள் குறித்து விவாதிக்க நாளை தமது தொழிற்சங்கங்களை, ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது. (அ)

# இனிமேல் சேமலாப நிதியை ஓய்வூதியமாகவும் பெறலாம்

கொழும்பு, ஜன. 13

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ், ஓய்வூதிய திட்டத்தினூடாக சலுகைகளை வழங்குவதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இந்த திட்டமானது தன்னார்வ விருப்பமாக இருக்குமென தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில், குறித்த திட்டத்தினூடாக ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு தெரிவுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையில் உள்ள தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ளல், ஓய்வூதிய அடிப்படையில் நிதியைப் பெறுதல் உள்ளிட்ட விடயங்கள் இந்தத் திட்டத்தில் அடங்குகின்றன.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் குறித்து விவாதிக்கப்படும் எனவும் தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

# விதை நெல் உற்பத்திக்கு விசேட காப்புறுதி திட்டம்

கொழும்பு, ஜன. 13

விதை நெல் உற்பத்திப் பண்ணைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், அந்தப் பண்ணைகளுக்கு காப்புறுதி செய்யும் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் நிலைமைகளை முகாமைத்துவம் செய்யும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

ஒரு ஏக்கர் விதை நெல் செய்கைக்காக 13,600 ரூபாய் காப்புறுதி செலுத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செலுத்தும் பட்சத்தில், பயிர்ச் சேதம் ஏற்படும்போது ஒரு ஏக்கருக்கு ஒரு 180,000 ரூபாய் நட்ட ஈட்டுத் தொகையை விவசாயிகளால் பெற்றுக்கொள்ள முடியும்.

அதன்படி வெள்ளம், வரட்சி, கட்டுப்பாடற்ற நோய்கள், பீடை மற்றும் பூச்சித் தாக்கங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான இயற்கை அனர்த்தங்கள் மட்டுமன்றி, காட்டு யானைகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களையும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்குவதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# கெஹலியவின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 13

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மகன் ரமித ரம்புக்வெல்ல, மகள் அமாலி நயனிகா ரம்புக்வெல்ல மற்றும் அவர்களின் பணியாளர் ஒருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீண்டும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சராகப் பணியாற்றிய காலப்பகுதியில், தனது தனிப்பட்ட பணியாளர் குழுவில் வெளி நபர்களின் பெயர்களைச் சேர்த்து, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் தனது சொந்த வங்கிக் கணக்குகளில் வரவு வைத்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசாங்கத்துக்குச் சொந்தமான சுமார் 8 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்ததாகவும், அதற்கு ஏனைய பிரதிவாதிகள் உடந்தையாக இருந்ததாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கின் மேலதிக விசாரணைகளை பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு ஏற்கனவே குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் தற்போது நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணையவழி மோசடிகளுக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை!

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 13

இணையவழி மோசடிகள் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி எப்.யு. வூட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட தகவல்களையோ அல்லது வங்கி மற்றும் நிதி தொடர்பான விபரங்களையோ எவருக்கும் பகிர வேண்டாம் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் சமூக வலைத்தளங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் நிதிமோசடிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயல்களைக் கையாள்வதற்கு சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு முழுமையான வசதிகளுடன் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோர் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக பொலிஸ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையதளங்கள் வாயிலாக நடைபெறும் மோசடிகள் அண்மைக்காலமாகப் பெருமளவில் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகவே, விசாரணைகளைத் தீவிரப்படுத்தவும் பொதுமக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கவும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (அ)

# மீண்டெழுந்தது இலங்கையின் அஞ்சல்துறை; ரூ. 13.1 பில்லியன் வருமானம் ஈட்டி சாதனை!

கொழும்பு, ஜன. 13

இலங்கை அஞ்சல் திணைக்களம் 2025 ஆம் ஆண்டில் திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை விஞ்சி, நீண்டகால தேக்க நிலைக்குப் பின்னர் ஒரு பாரிய மீண்டெழுதலைப் பதிவு செய்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் இலங்கை அஞ்சல் திணைக்களம் 13.1 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.

இது திறைசேரி எதிர்பார்த்த இலக்கை விட அதிகமானது என அஞ்சல் மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த அஞ்சல் ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் 2025 இல் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி ஜூன் 2025 இல் 378 உப அஞ்சல் அதிபர்கள் நிரந்தர நியமனங்களைப் பெற்றனர்.

அத்துடன் செப்ரெம்பரில், 1,000 அஞ்சல் உதவியாளர்களின் நியமனங்கள் முறைப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் திறந்த போட்டி மூலம் 600 அஞ்சல் சேவை அதிகாரிகளை பணியமர்த்துவதற்கான ஆட்சேர்ப்பு நடந்து வருவதாகவும், பெப்ரவரி 2026 இல் நியமனங்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அஞ்சல் மா அதிபர் கூறினார். (அ)

# மிகமலிவான நாடுகளில் இலங்கைக்கு முதலிடம்!

கொழும்பு, ஜன. 13

2026 ஆம் ஆண்டில் சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கும் ஓய்வு பெற்றதன் பின்னர் வசிப்பதற்கும் மிகவும் மலிவான ஐந்து இடங்களில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இன்டர்ந ஷனல் லிவ்விங் என்ற சஞ்சிகை உலக நாடுகளை பகுப்பாய்வு செய்து இந்த விடயத்தினை அறிவித்துள்ளது.

இது தவிர, உலகளாவிய ஓய்வூதிய குறியீட்டின் வாழ்க்கைச் செலவுப் பிரிவில் இலங்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், குடிவரவு நுழைவு நடைமுறைகள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றுடன் வாழ்க்கைச் செலவுகளையும் அடிப்படையாக கொண்டே இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மலிவான உள்ளூர் போக்குவரத்து வசதி மற்றும் வெளிநாட்டவர்கள் எழிதில் பெறக்கூடிய ஓய்வூதிய நுழைவு அனுமதிகள் காரணமாக இலங்கை முதன்மை தெரிவாக இருக்கின்றது.

இலங்கையில் ஒரு தம்பதியினர் மாதம், 2 ஆயிரத்து 200 அமெரிக்க டொலர் செலவில் முறையாக வாழ முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் ஆடம்பரமாக வாழ ஆயிரம் அமெரிக்க டொலர்களை செலவு செய்து சிறப்பான முறையில் வாழ முடியும் எனவும் இன்டர்நஷனல் லிவ்விங் சஞ்சிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.